# ஆலமரம்

**Que 1: கிராமங்களில் நடைபெறும் கோவில் திருவிழாவோடு தொடர்புடைய “முளைப்பாரி” பற்றிச் சிறுகுறிப்புத் தயார் செய்யுங்கள்.** ***Marks :(3)***

**Ans:**

- முளைப்பாரி பற்றிய செய்திகள்
- முறைகள்

**Que 2: ‘அழிப்பாங்கதை’ எனும் பெயரில் அறியப்படும் நாட்டுப்புற வழக்காறு.**

**அ) பழமொழி, ஆ) விடுகதை, இ) கதைப்பாடல், ஈ) பாடல்** ***Marks :(1)***

**Ans:** ஆ) விடுகதை

**Que 3: பள்ளி ஆண்டு மலரில் வெளியிட “நலிவடையும் நாட்டுப்புறக் கலைகளும் பாதுகாக்கும் வழிமுறைகளும்” எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.**

**குறிப்பு: (நாட்டுப்புறக்கலைகளின் அன்றையநிலை – ஊடகங்களின் வளர்ச்சி – இளைய தலைமுறையினரின் ரசனை – மனோபாவம் – தீர்வு.)** ***Marks :(5)***

**Ans:**

- வடிவம் ½
- கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்துதல் 2
- சான்றுகள் ½
- மொழிநடை 1
- தீர்வு 1

**Que 4: தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான தெருக்கூத்து பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.** ***Marks :(2)***

**Ans:**

- வடிவம்
- தெருக்கூத்து விளக்கம்

(தோற்றம், ஆட்முறைகள், மையப்படுத்தும் செய்திகள்.)

**Que 5: தமிழக நாட்டுப்புறக் கலைகளின் பெயர்கள் நான்கினை எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- கரகாட்டம்.
- காவடியாட்டம்.
- சிலம்பாட்டம்.
- பொய்க்கால் குதிரை.

**Que 6: நாட்டுப்புறப்பாடல் வகைகளில் ஒன்றான தாலாட்டு எனும் சொல்லில் 'தால்' என்பதன் பொருள்.**

**அ) மூக்கு ஆ) நாக்கு இ) கண் ஈ) காது** ***Marks :()***

**Ans:** ஆ) நாக்கு

**Que 7: செஞ்சிக்கோட்டையில் மாவீரனாக வாழ்ந்த மன்னன்.** ***Marks :()***

**அ) வீரபாண்டிய கட்டபொம்மன்**

**ஆ) காத்தவராயன்**

**இ) தேசிங்குராஜன்**

**ஈ) ஆர்காட்டு நவாபு.**

**Ans:** இ) தேசிங்குராஜன்

**Que 8: கேரளத்தில் குதிரைக்களி என அறியப்படும் தமிழக நாட்டுப்புறக் கலை.**

**அ) பொம்மலாட்டம் ஆ) காவடியாட்டம்**

**இ) புரவியாட்டம் ஈ) சிலம்பாட்டம்** ***Marks :()***

**Ans:** இ) புரவியாட்டம்

**Que 9: தொல்காப்பியர் 'பிசி' என்னும் சொல்லால் குறிப்பிடப்படும் நாட்டுப்புறக் கூறு.** ***Marks :()***

**அ) பழமொழி ஆ) விடுகதை**

**இ) பாட்டு ஈ) கதை**

**Ans:** ஆ) விடுகதை

**Que 10: பொருத்தமில்லாத பழமொழி எடுத்தெழுதுங்கள்.** ***Marks :()***

**அ) சித்திரைமாதம் சீர் கூட்டும் ஆ) ஆடிப்பட்டம் தேடிவிதை**

**இ) எலிவளையானாலும் தனிவளை வேண்டும் ஈ) தைபிறந்தால் வழிபிறக்கும்.**

**Ans:** இ) எலிவளையானாலும் தனிவளை வேண்டும்

**Que 11: புரவியாட்டத்தில் புரவி என்பதன் பொருளைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

**மான், பசு, குதிரை, எருது.** ***Marks :()***

**Ans:** குதிரை

**Que 12:** **“ஓசைபெறும் வெண்கலம்** ***Marks :()***

**ஓசைபெறா மட்கலம்”**

**அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு எழுதி, விளக்குக.**

**Ans:** திரிதல் புணர்ச்சி.

சொற்கள் தம்முள் சேரும்பொழுது ஒரு எழுத்து இன்னொரு எழுத்தாக மாறுவது திரிதல் புணர்ச்சி எனப்படும்.

**Que 13: உங்கள் பகுதியில் செயல்பட்டுவரும் தாமரை எனும் பெண்கள் குழு, பொம்மலாட்டத்திற்குத் தேவையான, தோல் பொம்மைகளை உருவாக்கியுள்ளனர். இதனை விற்பனை செய்வதற்காக விளம்பரம் தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- கவர்ச்சிகரமான மொழிப்பயன்பாடு.'

**Que 14: சிலப்பதிகாரம் கரகாட்டத்தை குடக்கூத்து என்றும் பொய்க்கால் குதிரையாட்டத்தை..................என்றும் குறிப்பிடுகிறது.** ***Marks :()***

**அ) தெருக்கூத்து ஆ) குதிரைக்கூத்து**

**இ) மரக்கால்கூத்து ஈ) குதிரையாட்டம்**

**Ans:** மரக்கால்கூத்து

**Que 15: நாட்டுப்புற இலக்கியங்களை இவ்வாறும் அழைப்பர்.** ***Marks :()***

**அ) செந்தமிழ் இலக்கியம்**

**ஆ) வாய்மொழி இலக்கியம்**

**இ) ஏட்டிலக்கியம்**

**ஈ) பண்டைய இலக்கியம்.**

**Ans:** வாய்மொழி இலக்கியம்

**Que 16:** **“பாடறியேன் படிப்பறியேன், பள்ளிக்கூடம் நானறியேன்**

**ஏடறியேன் எழுத்தறியேன், எழுத்துவகை நானறியேன்**

**ஏட்டிலே எழுதவில்லை, எழுதி வைத்துப் படிக்கவில்லை**

**வாயிலே வந்தபடி வகையுடனே நான்படிப்பேன்.”**

**மேற்காணும் பாடலின் மையப்பொருளைக் கண்டறிந்து, நாட்டுப்புறப்பாடல்களும் இலக்கிய நயமிக்கவை எனும் தலைப்பில் விமர்சனக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: பாடலின் மையக்கருத்து, எதுகை/மோனை, இயைபு/ இலக்கியத்தரமுடையவை.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- மொழிநடை.
- ஒப்பீட்டுத்திறன்.
- விமர்சன மனப்பாங்கு.

**Que 17: கேரள தற்காப்புக் கலையான களரிக்கலையைத் தமிழகத் தற்காப்புக் கலையான சிலம்பாட்டக் கலையுடன் ஒப்பீடு செய்து குறிப்பாக எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** வடிவம்

இரண்டு கலைகளைப் பற்றிய தகவல்கள்

ஒப்பீட்டுக் குறிப்பு (ஒற்றுமை, கருவிகள், அடவுகள், வேற்றுமை.)

**Que 18: கதையடங்கிய நாட்டுப்பாடல்கள் கதைப்பாடல்கள் எனப்படும்.**

**“கதைப்பாடல்களும் வகைகளும்” எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: கதைப்பாடல் விளக்கம், வகைகள், புராணக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- மொழிநடை.
- மேற்கோள் பயன்பாடு.
- கதைப்பாடல் பற்றிய விளக்கம்.
- வகைகள்.
- சிறப்புக்கள்.

**Que 19:**

**“எலிவளையானாலும்**

**தனிவளை வேண்டும்.”**

**“தாயும் பிள்ளையும் ஒண்ணானாலும்**

**வாயும் வயிறும் வேறவேற.”**

**பழமொழிகளின் கருத்துக்களை ஒப்பீடு செய்து எழுதுங்கள். *Marks :()***

**Ans:** பொருள் புரிதல்

கருத்து: எந்தப்பொருளாக இருந்தாலும் அவரவருக்குச் சொந்தமானதாக இருத்தல் வேண்டும்.

**Que 20: “கூத்தாடி கிழக்கே பார்ப்பான் *Marks :()***

**கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்”**

**எனும் பழமொழியில் இடம்பெற்ற முரண்சொற்களை எடுத்தெழுதுங்கள்.**

**Ans:** கிழக்கு x மேற்கு

**Que 21: இடைநிலையின் வகைகள்............. *Marks :()***

**அ) 4, ஆ) 6, இ) 3, ஈ) 5.**

**Ans:** இ) 3

**Que 22:**

**“மாசிப்பிறையோ நீ வைகாசி மாங்கனியொ**

**தேசப்பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ**

**எங்கள் குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்**

**தங்காமல் பொக்கிஷத்தைத் தானாள வந்த கண்ணோ.**

**மதுரை இருகாதம் வாழ் மதுரை முக்காதம்**

**ஐம்பத்தாறு தேசம் ஆளவந்த சீமானோ?**

**பாட்டனார் ஆண்ட பதினெட்டு ராச்சியமும்**

**நாட்டமுடன் ஆளவந்த ராசகுலநாயகமோ?**

**மேற்கண்ட பாடல்களை ஒப்பீடு செய்து குறிப்பு எழுதுங்கள்.” *Marks :()***

**Ans:**

- வரிசைப்படுத்துதல் (தாலாட்டுப் பாடல்களின் மையக்கருத்து)
- இரு பாடலையும் ஒப்பிடுதல்.
- கருத்துக்களைத் தொகுத்தெழுதுதல்.

**Que 23: “வாழைத் தோப்பு மழியக்கண்டேன்**

**அய்யோ மல்லிகைப் பூவுங் கருகக்கண்டேன்.”**

**இவ்வரிகள் வீரபாண்டியக் கட்டபொம்மன கதைப்பாடலில் இடம்பெற்றவை. இதுபோன்று உங்கள் பகுதியில் வழங்கும் தீய சகுனங்கள் இரண்டினை எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** தீய சகுனங்களைக் குறிப்பிடுதல்.

**Que 24: நல்லதங்காள் கதை எவ்வகையைச் சார்ந்தது.**

**அ) புராணக்கதை ஆ) சமூகக்கதை**

**இ) வரலாற்றுக்கதை ஈ) மந்திரக்கதை** ***Marks :()***

**Ans:** ஆ) சமூகக்கதை

**Que 25: “கதைப்பாடல்களும் வகைகளும்” எனும் தலைப்பில் பள்ளி ஆண்டு மலரில் வெளியிட கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: கதைப்பாடல் விளக்கம் – வகைகள் – எடுத்துக்காட்டுகள்**
***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- மொழிநடை.
- கதைப்பாடல் சிறுவிளக்கம்.
- வகைகள்.
- பொருத்தமான எடுத்துக்காட்டுகள்.

**Que 26: “கண்ணான கண்ணனுக்கு கண்ணுறக்கம் வராதோ**

**சுண்ணாம்பும் மஞ்சளுமா சுத்தி எறி கண்ணனுக்கு**

**வேப்பிலையும் மஞ்சளுமா விசும்பி எறி கண்ணனுக்கு.”**

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கூறுகளை எடுத்தெழுதுங்கள்.**
***Marks :()***

**Ans:**

- கண்ணேறு கழித்தல்.
- சுண்ணாம்பு, மஞ்சள்,
- வேப்பிலை, மஞ்சள்.

சேர்த்துச் சுத்திப்போடுதல்.

**Que 27: “மழை பேஞ்சும் கெடுக்கும்**

**பேயாமலும் கெடுக்கும்.”**

**இதுபோன்று மழை பற்றிய வேறு இரண்டு பழமொழிகளை எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** மழை பற்றிய பழமொழிகள்

1. சிறுதுளிப் பெருவெள்ளம்.
2. கும்பத்தில் மழை பெய்தால் குப்பையிலும் விளையும்.

**Que 28: நாட்டுப்புறக் கூறுகளில் ஒன்றான நாட்டுப்புறப் பாடல்களும் வகைகளும் பற்றிக் கட்டுரை தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்
- மொழிநடை
- நாட்டுப்புறப்பாடல் விளக்கம்.
- பாடல்களின் வகைகள்

(தாலாட்டு, ஒப்பாரி, விளையாட்டுப்பாடல், வண்டிப்பாடல், தொழிற்பாடல்.)

வினா வகை : விளக்கவினா

**Que 29: வீரபாண்டிய கட்டபொம்மனின் வீர வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் வியக்கத்தக்கன. வெள்ளையனை எதிர்த்துப் போராடத் தயாராகின்றான். அதற்கு முந்தியநாள் இரவு காணக்கூடாத பலதீய கனவுகளைக் காண்கிறாள் அவன் மனைவி. அவள் கண்ட கனவுகளையும், தீயசகுனங்களையும் எடுத்துக்கூறுகிறாள். போருக்குப் போகவேண்டாம் என்று கணவனிடம் கெஞ்சுகிறாள்.**

**வீரபாண்டியனின் மனைவி. கண்ட கனவையும், தீய சகுனங்களையும் குறிப்பாக எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

க ாகம் கரைதல்

பல்லி குழறுதல் தீய சகுணங்கள்.

தண்ணீர் செம்பு தவறுதல்

மஞ்சள் கரியானது

வாழைத்தோப்பு அழிதல் தீய கனவு.

ஆந்தை அலறுதல்

மல்லிகைப்பூ கருகுதல்

**Que 30: உங்களுக்குத் தெரிந்த பழமொழிகள், விடுகதைகள் நான்கினை எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- பொருத்தமான பழமொழிகள்.
- விடுகதைகள்.

**Que 31: வீரபாண்டிய கட்டபொம்மன், வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய செய்திகளை, "வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடல்" வழி பாடப்பகுதியில் படித்திருப்பீர்கள். கதைப்பாடலை கதை வடிவில் எழுதுங்கள்.**

**குறிப்பு: (வீரபாண்டியன் வாழ்க்கை, ஆங்கிலேயர்களை எதிர்த்த துணிவு, வீரத்தின் அடையாளம் தீய சகுனங்களுக்கு அஞ்சாமை.)** ***Marks :()***

**Ans:** வடிவம்

மொழிநடை

மையக்கருத்து:

வீரபாண்டியனின் வீரத்திறமை.

விடுதலை உணர்வு

தளராத மனநிலை

**Que 32: அரசு உயர்நிலைப்பள்ளியில், ராஜா பத்தாம் வகுப்பில் படித்துக் <u>கொண்டிருக்கிறான்</u>.** ***Marks :()***

**அடிக்கோடிட்ட சொல்லில் இடம்பெற்றுள்ள இறந்தகால இடைநிலையை எடுத்தேழுதுங்கள்.**

**Ans:** மதிப்பீட்டுக் குறிப்பு : கிறு

**Que 33:**

**"வாழைத்தோப்பு அழியக்கண்டேன்**

**அய்யோ மல்லிகைப் பூவுங்கருகக் கண்டேன்**

**ஆந்தை அலறி விழுகக் கண்டேன் ஒரு**

**அறியாயக் கூகை குழறக் கண்டேன்"**

1. **வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடலில் இடம்பெற்றுள்ள தீயசகுனங்களை எடுத்தெழுதுங்கள்.**
2. **இதுபோன்று உங்கள் வட்டாரங்களில் வழங்கி வரும் தீய சகுனங்கள் இரண்டினை எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- வாழைத்தோப்பு அழிதல்
- மல்லிகைப்பூ கருகுதல்
- ஆந்தை அலறுவது
- கூகை குழறுதல்

**Que 34: வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடலைக் கதை வடிவில் எழுதுங்கள்.** ***Marks :(4)***

**Ans:**

- வடிவம் 1
- வீரபாண்டியன் இளமைக்காலம் 1
- வாழ்க்கைக் குறிப்பு 1
- போர் பற்றியச் செய்திகள் 1

(தீய சகுனங்கள் – மன உறுதி)

**Que 35: பள்ளி ஆண்டு மலரில் வெளியிட "தமிழக நாட்டுப்புறக் கலைகள்" எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.**

**குறிப்பு: நாட்டுப்புறக் கலைகள்.**

**வகைகளின் விளக்கம்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- மொழிநடை.
- நாட்டுப்புறக் கலைகளின் வகைகளும், விளக்கங்களும்.

**Que 36: கேரளக் கலையான களரிக்கலைத் தமிழகக் கலையான சிலம்பாட்டக் கலையோடு ஒப்பீடு செய்து குறிப்புத் தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: களரி, சிலம்பாட்டம், சிறுவிளக்கம், ஒப்பிடுல், ஒற்றுமை, வேற்றுமைகள்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- கலைகளின் விளக்கம்.
- ஒற்றுமை/வேற்றுமை
- ஒப்பீடும் திறன்.

**Que 37: தேசிய விளையாட்டுத் தினமான ஆகஸ்டு 29-ஆம் நாள் கேரளத் தற்காப்புக் கலைகளில் ஒன்றான 'களரிக் கலை' உங்கள் பள்ளி**

**மைதானத்தில் வைத்து நடைபெறவுள்ளது. அதற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:** வடிவம்.

மொழிநடை.

கருத்துத்தெளிவு.

**Que 38: நாட்டுப்புறக் கலைஞர் அம்மாபேட்டை கணேசன் தெருக்கூத்து, தோல்பாவை, பொம்மலாட்டம் போன்ற கலைகளில் சிறந்தவர். இவரின் கலைத்திறமையை வெளிக்கொண்டுவரும் பொருட்டு, சேலம் ஏர்வாடியில் உள்ள, களரி தொல்கலைகள் மற்றும் கலைஞர்கள் மேம்பாட்டு மையம் சார்பில் ‘விதைத்தவசம்’ எனும் ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பத்திரிகை விளம்பரம் தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:** வடிவம்

செய்தி

கவர்ச்சி

**Que 39: நாடடுப்புறக் கலைகள் நலிந்து வருகின்ற இன்றையச் சூழலில், கதைப்பாடலின் ஒரு வடிவமாகிய வில்லுப்பாட்டு பற்றிய கருத்தரங்கம் உங்கள் பள்ளியில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கத்தில் வெளியிடும் பொருட்டு, “மண்ணின் அடையாளங்களில் ஒன்று வில்லுப்பாட்டு” எனும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: வில்லுப்பாட்டு பற்றிய விளக்கம், நலிவடைவதற்கான காரணங்கள், பாதுகாக்கவேண்டிய தேவை.** ***Marks :()***

**Ans:**

- மொழிநடை.
- மேற்கோள்.
- வில்லுப்பாட்டு பற்றிய குறிப்பு.
- மண்ணின் அடையாளங்கள்.
- பாதுகாப்பதன் தேவை

**Que 40: பொய்க்கால் குதிரை ஆட்டக்காரரர் இராணுபாய் அவர்களை நேர்காணல் செய்து, பொய்க்கால் குதிரையாட்டங்களைப் பற்றி பாடப்பகுதி வழி அறிந்து கொண்டிருப்பீர்கள். அக்கலை பற்றிய விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.**

**குறிப்பு: (பொய்க்கால் குதிரை பெயர்க்காரணம், கலையின் இன்றையநிலை, அதற்கான காரணங்களும், தீர்வுகளும், ஆடல் அலங்கார முறைகள்.)** ***Marks :()***

**Ans:** பெயர்க்காரணம்.

ஆடை அலங்கார முறைகள்.

அழிவதற்கான காரணங்கள்.

அழியாமல் பாதுகாக்கும் வழிமுறைகள்.

**Que 41: கீழ்வரும் தாலாட்டுப் பாடலில் இடம்பெறும் பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.** ***Marks :()***

**பால்குடிக்கக் கிண்ணி**

**பழந்திங்கச் சேணாடு**

**நெய் குடிக்கக் கிண்ணி**

**முகம்பார்க்கக் கண்ணாடி**

**கொண்டைக்குக் குப்பி**

**கொண்டு வந்தான் தாய்மாமன்.**

**Ans:** குழந்தை பிறந்தவுடன் தாய்மாமன் சீர் கொண்டு வருவது வழக்கம்.

கிண்ணி, சேணாடு, கண்ணாடி, பால்குப்பி போன்ற குழந்தைக்குத் தேவையானப் பொருளை தாய்மாமன் சீர்வரிசையாகக் கொண்டு வருவது வழக்கம்.

**Que 42: உங்கள் பள்ளியில் கலைவிழாவை முன்னிட்டு நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு நடைபெற உள்ளது. அதற்கான ஒலிபெருக்கி அறிவிப்பு தயார் செய்யுங்கள். (அழைப்புச் சொல் – வில்லுப்பாட்டு பற்றிய சிறு விளக்கம் – அறிவிப்பு.)** ***Marks :()***

**Ans:**

- அறிவிப்பு முகமன்.
- வில்லுப்பாட்டு பற்றிய குறிப்பு.
- செய்தித் தெளிவு.

**Que 43: கீழ்வரும் கலைகளையும் அவற்றின் ஆடல் முறைகளையும் ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்.** ***Marks :()***

**சிலம்பாட்டம் - குதிரை வடிவிலான கூடு அணிந்து ஆடுவது.**

**கரகாட்டம் - கம்புகளைக் கொண்டும் ஒலியெழுப்புதல்.**

**புரவியாட்டம் - பெண்கள் வட்டமாக நின்று ஆடுவது.**

**கும்மியாட்டம் - தலையில் கரகம் வைத்து ஆடுதல்.**

**Ans:** சிலம்பாட்டம் - கம்புகளைக் கொண்டும் ஒலியெழுப்புதல்.

கரகாட்டம் - தலையில் கரகம் வைத்து ஆடுதல்.

புரவியாட்டம் - குதிரை வடிவிலான கூடு அணிந்து ஆடுவது.

கும்மியாட்டம் - பெண்கள் வட்டமாக நின்று ஆடுவது.

**Que 44: நாட்டுப்புறக் கலைகள் பண்பாட்டின் அடையாளங்கள். அவை என்றும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியவை. நம்முடைய கவனக் குறைவாலும், புதுமையை விரும்பும் புதிய தலைமுறையினரின் ஆர்வத்தாலும் அறிவியலின் வளர்ச்சி காரணமாகவும் நம் பாரம்பரிக் கலைகள் மண்மறைந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, கலைமன்றத்தில் உரையாற்ற "நாட்டுப்புறக் கலைகள் மண்ணின் அடையாளங்கள்" எனும் தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: நாட்டுப்புறக் கலைகளின் வகைகள் – அழிந்துவரும் கலைகள் – நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் – அழிவதற்கான சூழ்நிலைகள் – தீர்வுகள்)**
***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- மொழிநடை.
- அழிந்துவரும் கலைகள்.
- அழிவதற்கான காரணங்கள்.
- பாதுகாப்பதன் அவசியம்.
- தீர்வுகள்.

**Que 45: விடுபட்ட இடங்களை நிரப்புங்கள். *Marks :()***

**குதிரை வடிவிலான கூடு செய்து ஆடும் ஆட்டம்............ ஆகும்.**

**கம்புகளைக் கொண்டு ஒலியெழுப்பும் ஆட்டம்..............ஆகும்.**

**Ans:** புரவியாட்டம்

சிலம்பாட்டம்

**Que 46: பேச்சுமொழிக்கு இணையான இலக்கியச் சொற்களை எழுதுங்கள்.**

**[கெடயாது, குதுரெ, எலக்கணம், வித்தெ]** ***Marks :()***

**Ans:**

- கிடையாது
- குதிரை
- இலக்கணம்

- வித்தை

**Que 47: நாட்டுப்புறப் பாடல்கலையில் சிறப்புப்பெற்ற தமிழ்நாட்டில், சென்னையில் பிறந்தவர் நாட்டுப்புறக் கலைஞர் புஷ்பவனம் குப்புசாமி. முதுகலை (எம்.ஏ.,) முனைவர் (பிஎச்.டி.,) போன்ற பட்டங்களை நாட்டுப்புற இசையில் பெற்றுள்ளார். மேலும், தமிழக அரசின் கலைமாமணி விருது, இசைமாமணி, நாட்டுப்புற நல்லிசை நாயகன் என்று பல்வேறு விருகளைப் பெற்றுள்ள இவர், உங்கள் பள்ளி கலைமன்ற விழாவைத் துவக்கி வைக்க வருகை தரவுள்ளார். நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்புகளை அறிந்துகொள்ளும் பொருட்டு நேர்காணல் காண்பதற்கான வினாநிரல் தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:** பொருத்தமான ஆறு வினாக்கள்.

**Que 48: நாட்டுப்புறக் கலைகள் இன்றையச் சூழலில் நலிவடைந்து வருகின்றன. ஆற்றிற்குப் புத்துயிர் கொடுத்துவரும் தலைமுறைக்கு எடுத்துரைக்கும் பொருட்டு, உங்கள் ஊரில் கலைமன்றம் ஒன்று தொடங்கப்படவுள்ளது. அதன் தலைவராகப் பொறுப்பேற்கும் நீங்கள் நாட்டுப்புறக் கலைகளின் மேம்பாட்டிற்காக நடைமுறைப் படுத்தும் திட்டங்களைக் குறிப்புக்களாக எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- கருத்துக்களை வரிசைப்படுத்துதல்.
- கலைகளைப் பாதுகாக்கும் மனநிலை.
- கலைஞர்களின் நல்வாழ்வு.

**Que 49: தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.** ***Marks :()***

- **தரைல**
- **வித்தை**
- **வெரல்**
- **எலக்கணம்**

**Ans:** தரையில், வித்தை, விரல், இலக்கணம்.

**Que 50: ஏற்றபடி இணைத்தெழுதுங்கள்.**

**அ) கி.வா.ஜெகநாதன் - தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்.**

**ஆ) தமிழண்ணல் - தமிழர் நாட்டுப்பாடல்கள்.**

**இ) நா.வானமாமலை - நாடோடி இலக்கியம்.**

**ஈ) கி.ராஜநாராயணன் - தாலாட்டு.** ***Marks :()***

**Ans:** அ) கி.வா.ஜெகநாதன் - நாடோடி இலக்கியம்.

ஆ) தமிழண்ணல் - தாலாட்டு.

இ) நா.வானமாமலை - தமிழர் நாட்டுப்பாடல்கள்.

ஈ) கி.ராஜநாராயணன் - தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்.

**Que 51: தமிழக அரசின் கலைமாமணி விருதுபெற்ற நாட்டுப்புறக் கலைஞர் அம்மாப்பேட்டை கணேசன் உங்கள் பள்ளி கலைவிழாவிற்கு வருகை தரவுள்ளார். தோல்பாவை, பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற கலைகளைப் பற்றி விளக்கமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு வினாநிரல் தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- வினாவின் தரம்
- தொடர்பு

**Que 52: பொய்க்கால் குதிரையாட்டம் இன்றையச் சூழலில், அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- நாட்டுப்புறங்களின் இன்றைய நிலை (காரண காரியத் தொடர்பு).
- அதற்கானக் காரணங்களும் தீர்வுகளும்.

**Que 53: பொய்க்கால் குதிரை எனும் நாட்டுப்புறக் கலையின் ஆடல் முறைகள் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** பொய்க்கால் குதிரை

ஆட்டம் பற்றிய விளக்கம்

ஆடல் முறைகள்

**Que 54: கீழ்க்காணும் பாடலில் இடம்பெற்றுள்ள தமிழக நாட்டுப்புறக் கலைகளை எடுத்தெழுதுங்கள்.** ***Marks :()***

**சிறகை விரித்தால் ஒயிலாட்டம்**

**சீறிப்பாய்ந்தால் புலியாட்டம்**

**திரையில் மறைந்தால் நிழலாட்டம்**

**Ans:** மயிலாட்டம்

ஒயிலாட்டம்

புலியாட்டம்

**Que 55: குதிரை வடிவிலான கூடு அணிந்து அதன் மேல் சவாரி செய்வது போல ஆடப்படும் தமிழக நாட்டுப்புறக்கலை.** ***Marks :()***

**அ) ஒயிலாட்டம்      ஆ) புரவியாட்டம்**

**இ) புலியாட்டம்       ஈ) பொம்மலாட்டம்**

**Ans:** ஆ) புரவியாட்டம்

**Que 56: குதிரையும் காணவில்ல**

**கூத்துக்களும் தெரியவில்லை**

**வளர்த்து வச்ச கலைகளெல்லாம்**

**போன இடம் எங்கேன்னு தெரியல...**

**நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலையை இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது. இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் அலசி ஆராய்ந்து, விமர்சனக் கட்டுரை தயார் செய்யுங்கள். குறிப்பு: (நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலை கலைஞர்களுக்குப் போதிய மதிப்பும் வருமானமும் இல்லை. விளைவுகள், தீர்வு.)** ***Marks :()***

**Ans:**

- நாட்டுப்புறக் கலைகளின் அன்றைய நிலை
- (பண்பாடு, கலாச்சாரத்தின் அடையாளங்கள்).
- ஊடகங்களின் வளர்ச்சியால் இன்று கலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- கலைகளின் அழிவினால் ஏற்படும் பிரச்சனைகள்.
- தீர்வு.
- கலைகளைப் பாதுகாக்கும் மனநிலை.

**Que 57: தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்றான கரகாட்டக்கலை அழிந்து வருவதற்கான காரணங்களை வரிசைப்படுத்துங்கள்** ***Marks :(3)***

**Ans:** தகவல் தொழில்   நுட்ப வளர்ச்சி
பொருளாதாரம்
சமூகப்பின்னணி

**Que 58: பட்டணத்தில் வசிக்கும் உங்கள் நண்பனுக்கு நாட்டார் மக்களின் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக விளங்குகின்ற கரகாட்டக்கலையின் சிறப்புகளை
எடுத்துக்கூறும் முறையில் கடிதம் தயார் செய்யுங்கள்.** ***Marks :(4)***

**Ans:** வடிவம்
உள்ளடக்கம்

**Que 59: பொங்கல் திருவிழா அன்று உங்களது பள்ளி வளாகத்தில் கரகாட்டக்கலை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்நிகழ்வைப் பொதுமக்கள் அறியும் வகையில் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.** ***Marks :(3)***

**Ans:** வடிவம்
கவர்ச்சியான உள்ளடக்கம்

**Que 60: தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று திருச்சி நித்தியா அவர்களின் கரகாட்டம் பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ளது.இதற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.** ***Marks :(3)***

**Ans:** வடிவம்
கவர்ச்சியான உள்ளடக்கச் செய்தி

**Que 61: ஊர்த்திருவிழாவில் நீங்கள் கண்டு களித்த நாட்டுப்புறக் கலைகளில் ஏதேனும் ஒன்றை வர்ணித்து குறிப்பு எழுதுங்கள்.** ***Marks :(4)***

**Ans:** வடிவம்
கருத்துக்கள்
வருணனைச்சொற்கள்

**Que 62: பாமர மக்களின் பண்பாட்டுக்கூறுகளைப் பிரதிபலிக்கின்ற கரகாட்டக்கலையின் வகைகளைப் பட்டியலிடுங்கள்.** ***Marks :(3)***

**Ans:** கரகாட்ட வகைகள்

**Que 63: கரகக் கலைஞர்களின் ஒப்பனை முறைகள் பற்றி விளக்கக்குறிப்பு எழுதுங்கள்.** ***Marks :(3)***

**Ans:** கருத்துக்கள்
மொழிநடை

**Que 64: பெங்களூரில் பாஞ்சாலிக்குத் திகளர்களால் எடுக்கப்படும் கரக வகை?** ***Marks :(1)***

**(அ)சக்திகரணம்** **(ஆ) பச்சைக்கரகம்**

**(இ) பூங்கரகம்** **(ஈ) வேப்பிலைக்கரகம்**

**Ans:** (ஆ) பச்சைக்கரகம்

**Que 65: அபிநயங்களைப்(நடிப்பு) பற்றிக் குறிப்பிடும் வேதநூல்?** ***Marks :(1)***

**(அ)அதர்வண வேதம்** **(ஆ) யஜூர் வேதம்**

**(இ) ரிக் வேதம்** **(ஈ) சாம வேதம்**

**Ans:** (ஆ) யஜூர் வேதம்

**Que 66: தமிழர் திருநாளான தைப்பொங்கல் அன்று பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் நடைபெறும் பேச்சுப்போட்டியில் கலந்து கொள்வதற்கு 'கரகாட்டக்கலையின் சிறப்புக்கள்' எனும் தலைப்பில் சொற்பொழிவு தயாரியுங்கள்** ***Marks :(4)***

**Ans:** முகமன்
செய்திகள்
பொருத்தமான மேற்கோள்கள்
மொழிநடை

**Que 67: பள்ளிக் கலை மன்றம் சார்பில் ஆகஸ்ட் 15-ம் தேதி காலை 10 மணிக்கு கரகாட்டம் நடைபெறவுள்ளது. அதற்கான சுற்றறிக்கை தயாரியுங்கள்** ***Marks :(3)***

**Ans:** வடிவம்

உள்ளடக்கச்செய்தி

**Que 68: கரகாட்டத்திற்குப் பயன்படும் ஆட்டக்கரகம் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்** ***Marks :(3)***

**Ans:** கருத்துக்கள்
மொழிநடை

**Que 69: கரகாட்டக்கலையுடன் தொடர்புடைய காப்பியநூல் ?** ***Marks :(1)***

**(அ)மணிமேகலை (ஆ) குண்டல கேசி**

**(இ) சிலப்பதிகாரம் (ஈ) பச்சைக்கரகம்**

**Ans:** (இ) சிலப்பதிகாரம்

**Que 70: தற்காலத்தில் கரகாட்டக்கலை நலிவடைவதற்கான காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும் எடுத்துக் கூறும் வகையில் பத்திரிக்கை ஒன்றிற்குத் தலையங்கம் தயார் செய்யுங்கள்** ***Marks :(5)***

**Ans:** வடிவம்
பிரச்சினையை பகுப்பாய்வு செய்தல்
காரண காரியங்களிடன் தொடர்புபடுத்துதல்
தீர்வு

**Que 71: கரகாட்டக் கலைக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் பெயர்களை வரிசைப்படுத்துங்கள்?** ***Marks :(2)***

**Ans:** பறை, பெரிய உடுக்கு சிறிய உடுக்கு ,சந்தக்குழல் ,செண்டை

**Que 72: 'குதிரைக்களி' என அறியப்படும் தமிழக நாட்டுப்புறக்கலை.**
***Marks :()***

**அ) பொம்மலாட்டம்**

**ஆ) காவடியாட்டம்**

**இ) புரவியாட்டம்**

**ஈ) சிலம்பாட்டம்**

**Ans:** இ) புரவியாட்டம்

**Que 73: பொய்க்கால் குதிரையை அண்டிய கலைத்தொழில்கள், இன்றைய வியாபார வாழ்வில் நசுங்கி ஒழிந்து கொண்டிருக்கின்றன. நாட்டுப்புறக் கலைகள் நலிவடைவதற்கான காரணங்களையும், தீர்வுகளையும் சுட்டிக்காட்டி, பத்திரிகைத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: (நாட்டுப்புறக் கலைகள், பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் அன்றைய நிலை, இன்றைய நிலை, அதற்கான காரணங்கள், பாதுகாக்கும் வழிமுறைகள்.)** ***Marks :()***

**Ans:** தலைப்பு

வடிவம்

நாட்டுப்புறக் கலைகளின் அன்றைய/இன்றைய நிலைகள்.

நலிவடைவதற்கான காரணங்கள். வியாபார நோக்கம். பாதுகாக்கும் வழிமுறைகள்.

**Que 74: தமிழ்மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப்பாடிய ஆழ்வார்.** ***Marks :()***

**அ) நம்மாழ்வார் ஆ) பெரியாழ்வார்**

**இ) பேயாழ்வார் ஈ) பூதத்தாழ்வார்**

**Ans:** ஆ) பெரியாழ்வார்

**Que 75: கேரள நாட்டு 'கதகளி', பஞ்சாபிலுள்ள 'கதக்' போன்ற கலைகளின் கூறுகள் அமையப்பெற்ற தமிழக நாட்டுப்புறக் கலையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.** ***Marks :()***

**அ) காவடியாட்டம் ஆ) பொய்க்கால் குதிரை**

**இ) கோலாட்டம் ஈ) சிலம்பாட்டம்**

**Ans:** ஆ) பொய்க்கால் குதிரை

**Que 76: உங்கள் பள்ளிக் கலைமன்றம் சார்பில், மாணவர்கள் தயார் செய்த நாட்டுப்புறக் கலைக் கைவினைப் பொருட்களான கரகம், பொம்மைகள், அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றின் கண்காட்சி நடைபெறவுள்ளது. அதற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- செய்திச் சுருக்கம்.

**Que 77: "மண்ணுத் தரைலேதான் இந்த ஆட்டம் சொகம். கட்டாந்தரைல சிமிண்டுத் தரைல மேடையில எல்லாம் இந்த ஆட்டம் ஆட முடியாது."**

**திருந்திய நடையில் எழுதுக.** ***Marks :()***

**Ans:** தூயத்தமிழ் நடையில் எழுதுதல்.

**Que 78: உங்கள் பள்ளியில் இளைஞர் மன்றம் சார்பில் நாட்டுப்புறக் கலைஞர்களைக் கௌரவப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்**

**அம்மாபேட்டை கணேசன் வருகை தரவுள்ளார். அவரை வரவேற்பதற்கான வரவேற்புரை தயார் செய்யுங்கள்** ***Marks :()***

**Ans:** வடிவம்

மொழிநடை

தெளிவான தகவல்கள்

(அம்மாபேட்டை கணேசனின் இளமைக்காலம், கலையார்வம், விருதுகள்)

**Que 79: நாட்டுப்புறக் கலைகள் இன்றையச் சூழலில் நலிவடைந்து வருகின்றன. அவற்றிற்குப் புத்துயிர் ஊட்டும் பொருட்டு, உங்கள் ஊரில் 'கலைமன்றம்' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நீங்கள், நாட்டுப்புறக்கலைகளை மேம்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்புக்களாக எழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** நாட்டுப்புறக் கலைகள் நலிவடைவதற்கான காரணங்கள்.

பாதுகாக்க மேற்கொள்ளும் முயற்சிகள்.

(மன்றங்கள் அமைத்தல், கலைகளை நிகழ்த்துதல், கலைகளைக் கௌரவப் படுத்துதல்.)

**Que 80: <u>மந்தி</u>யும் அறியா மரன்பயில் <u>அடுக்கம்.</u>**

**(பொருள் : மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குரங்கு, சிங்கம், புலி போன்று பல்வேறு விலங்குகள் இந்நிலத்தில் வாழ்கின்றன.)**

**அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தொடரில் இருந்து எடுத்தெழுதுங்கள்.** ***Marks :()***

**Ans:** மந்தி – குரங்கு

அடுக்கம் – மலை

**Que 81: தஞ்சாவூருக்கு வர்ற எந்த வெளிநாட்டானுங்க கிட்டேயும் எங்களை அலங்காரம் பண்ணிக் கொண்டுபோய் நிறுத்திடுவாங்க. ஒருநாள் ஒரே ஒரு ஆட்டம். காப்பி, விருந்து, போட்டோ எல்லாம் குடுப்பாங்க. அதோட சரி. ஆனால், அந்தக் காலத்துல கோயில் உண்டக்கட்டி வாங்கிச் சாப்பிட்டு ஆடினப்போ இருந்த திருப்தி இப்போ இல்லீங்க.** ***Marks :()***

**பொய்க்கால் குதிரையாட்டக்காரர் இராணுபாய் அவரின் வேதனை நிறைந்த மன வெளிப்பாட்டை இப்பகுதி வெளிப்படுத்துகின்றது. இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் விமர்சனம் செய்து எழுதுங்கள்.**

**குறிப்பு: (நாட்டுப்புறக் கலைகளின் அன்றைய நிலை, ஊடகங்கள் வளர்ச்சி, பொருளாதாரக் குறைவு, இன்றைய இளைய சமூகத்தின் இரசனை உணர்வு).**

**Ans:** மொழிநடை

அன்றைய கலைகளின் வளர்ச்சி

இன்றையச் சமூகச்சூழல்.

கலைகள் போற்றப்படாததன் காரணங்கள்.

பாதுகாக்கும் வழிமுறைகள்.

**Que 82: வானம் பொழிகிறது பூமி விளைகிறது**

**உனக்கு ஏன் கொடுக்கவேண்டும வரி?**

**என்ற வீரவசனம். வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய வீரத்திலகம் வீரபாண்டியனின் பண்புகளை எடுத்துரைக்கின்றன. சுதந்திரதின வழாவை முன்னிட்டுப் பள்ளியில் நடைபெறும் பேச்சுப்போட்டியில் உரையாற்ற "வீரமகன் வீரபாண்டிய கட்டபொம்மன்" எனும் தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: (கட்டபொம்மன் வாழ்க்கைக் குறிப்பு, விடுதலை உணர்வு, வெள்ளையர்களை எதிர்க்கும் பண்பு, வீரமகன்.)** ***Marks :()***

**Ans:** மொழிநடை

சொற்பொழிவுரை: வீரபாண்டியன் வரலாறு

விடுதலை வேட்கை

தலைவணங்காப் பண்பு

**Que 83: "புட்டுக்கு மண் சுமந்தாரறிய நானும்**

**பொல்லாத சொப்பனங் கண்டேன்"**

**வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடலில் இடம்பெற்ற இவ்வரிகளில் குறிப்பிடப்படும். பிட்டுக்கு மண் சுமந்த இறைவன் பெயரை எடுத்தெழுதுங்கள்.**

**(விஷ்ணு, முருகன், சிவபெருமான், இந்திரன்.)** ***Marks :()***

**Ans:** சிவபெருமான்

**Que 84:** **பின்வரும் பழமொழியையும் திருக்குறளையும் ஒப்பிட்டு சிறு குறிப்பு எழுதுங்கள்.** ***Marks :()***

**"மழை பேஞ்சும் கெடுக்கும்**

**பேயாமெயும் கெடுக்கும்" - பழமொழி.**

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே**

**எடுப்பதூஉம் எல்லாம் மழை." - திருக்குறள்.**

**குறிப்பு: பாடல்பொருள், ஒப்பீட்டுக் குறிப்புகள் – கருத்து ஒற்றுமை.)**

**Ans:**

- ஒப்பீடு செய்தல்.
- கருத்துக்களை வரிசைப்படுத்தி வெளியிடுதல்.

**Que 85:**

| |
|---|
| **அல்லி அரசாணி கதை, கட்டபொம்மன் கதை,<br>தேசிங்குராஜன் கதை, பார்வதி தட்சராஜன் கதை.** |

**அட்டவணையில் இடம்பெற்ற கதைப்பாடல்களை, சரித்திரக்கதைப் பாடல்கள், புராணக்கதைப் பாடல்கள் என வகைப்படுத்துங்கள். *Marks :()***

**Ans:**

| வரலாற்றுக்கதைப் பாடல்கள் | புராணக்கதைப் பாடல்கள் |
|---|---|
| கட்டபொம்மன் கதை | பார்வதி தட்சராஜன் கதை |
| தேசிங்குராஜன் கதை | அல்லி அரசாணி கதை |

**Que 86: பகுபதத்தின் முதலில் நிற்கும் உறுப்பு பகுதி எனப்படும்.**

**இறுதியில் நிற்கும் உறுப்பு ------------ எனப்படும்.**

**அட்டவணையில் இருந்து சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள். *Marks :()***

**Ans:** மதிப்பீட்டுக் குறிப்பு : விகுதி

**Que 87: அடைப்புக் குறிக்குள் இடம்பெற்றுள்ள இடைநிலைகளை, இறந்தகால இடைநிலைகள், நிகழ்கால இடைநிலைகள், எதிர்கால இடைநிலைகள் என்று வகைப்படுத்துங்கள்.**

**('த், கிறு, ப், இன், இல், கின்று, வ்')** ***Marks :()***

**Ans:**

| காலங்கள் | இடைநிலைகள் |
|---|---|
| இறந்தகாலம் | த், இன் |
| நிகழ்காலம் | கிறு, கின்று |
| எதிர்காலம் | இல், வ் |

**Que 88: 'விதைத்தவசம்' எனும் ஆவணப்படம் எந்த நாட்டுப்புறக் கலைஞரை மையப்படுத்தி எடுக்கப்பட்டது.** ***Marks :()***

**அ) இராணுபாய் ஆ) அம்மாபேட்டைக் கணேசன்**

**இ) நாடிராவ்  ஈ) இராமகிருஷ்ணநாயுடு**

**Ans:** மதிப்பீட்டுக் குறிப்பு : ஆ) அம்மாபேட்டைக் கணேசன்

**Que 89: கிராமங்களிலும், கோயில் திருவிழாக்களிலும், கட்டாயமாக நிகழ்த்தப்பட்டு வந்த கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம் போன்ற ஆட்டக்கலைகள் இன்றைய மக்கள் மத்தியில் மங்கிப்போயின. சினிமா, ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் அவற்றின் இடத்தைப் பிடித்துக்கொண்டன. நாட்டுப்புறக் கலைகள் மறைந்து போனால், மண்ணின் அடையாளங்களும் மறைந்து போகும். இக்கருத்தை விளக்கி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பத்திரிகை தலையங்கம் தயார் செய்யுங்கள்.**

**குறிப்பு: நாட்டுப்புறக் கலைகள் – பண்பாடு – கலாச்சார வெளிப்பாடு – அழிவதற்கான காரணங்கள் – பாதுகாக்கும் வழிமுறைகள்.)** ***Marks :()***

**Ans:**

- வடிவம்.
- நாட்டுப்புறக் கலைகளும் சிறப்புக்களும்.
- பண்பாட்டு கலாச்சாரத்தின் அடையாளங்கள்.
- கலைகள் அழிவதற்கான காரணங்கள்.
- பாதுகாக்கும் வழிமுறைகள்.

**Que 90: வட்டார மொழியில் அமைந்துள்ள இப்பகுதியைத் தூய தமிழில் எழுதுங்கள்.**

**“விளாவுலெ எல்லாம் ஆடப்போகும்போது எங்கள இப்டீயே ரோட்ல வச்சே கூத்தடிக்கிறாங்களேன்னு தோணுமுங்க. ஆனாலும் ஜனங்கள் ரொம்ப ரசிச்சுப் பாப்பாங்க. பொய்க்கால் குதுரெ ஆட்டமிருக்கே, இது தரைல ஆடறதில்ல, கட்டமேலே பெருவெரல்ல ஊணி ஆகாயத்துல ஆடறது.”** ***Marks :()***

**Ans:** தூய தமிழில் எழுதுதல்.

**Que 91: அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள கலைகளைக் கேரளக் கலைகள், தமிழகக் கலைகள் என்று வகைப்படுத்தி எழுதுங்கள்.**

**[ தெய்யம், படையணி, மோகினியாட்டம், கும்மி, கரகம், துள்ளல், பொம்மலாட்டம், காவடியாட்டம்]** ***Marks :()***

| **Ans:** தமிழகக் கலைகள் | **கேரளக் கலைகள்** |
|---|---|
| கரகம் | **மோகினியாட்டம்** |
| கும்மி | **தெய்யம்** |
| காவடியாட்டம் | **படையணி** |

பொம்மலாட்டம்

**Que 92: குதிரையும் காணவில்ல**

**கூத்துக்களும் தெரியவில்லை**

**வளர்த்து வச்ச கலைகளெல்லாம்**

**போன இடம் எங்கேன்னு தெரியல...**

**நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலையை இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது. இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் அலசி ஆராய்ந்து, விமர்சனக் கட்டுரை தயார் செய்யுங்கள். குறிப்பு: (நாட்டுப்புறக் கலைகளின் இன்றைய நிலை, கலைஞர்களுக்குப் போதிய மதிப்பும் வருமானமும் இல்லாத நிலை, விளைவுகள், தீர்வு.)** ***Marks :()***

**Ans:**

- நாட்டுப்புறக் கலைகளின் அன்றைய நிலை
- (பண்பாடு, கலாச்சாரத்தின் அடையாளங்கள்).
- ஊடகங்களின் வளர்ச்சியால் இன்று கலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- கலைகளின் அழிவினால் ஏற்படும் பிரச்சனைகள்.
- தீர்வு.
- கலைகளைப் பாதுகாக்கும் மனநிலை.